**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S.44/2024**
**Chief Examination of PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | சின்னப்பொன்னு |
| Father's Name | : | அர்சுணன் |
| **Village** | : | ஆனானந்தல் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 75 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 05.06.2025.**

**வாதி தரப்பில் சாட்சியம்:**

நான் தற்போது ஆனானந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் பட்டா ஆணங்கள் ஏதும் வருவாயத்துறை 1ம் பிரதிவாதி பெயரில் கொடுக்ககூடாது எனக்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கினை நிருபணம் செய்வதற்காக இந்த முதன்மை பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 10.08.1998ம் தேதி அன்று நான் ராஜப்பன் என்பவரிடம் இருந்து தாவா சொத்தினை கிரயம் பெற்றேன் அந்த கிரயப் பத்திர ஆவண எண்.796/1998 ஆகும். அந்த கிரய பத்திரம் **வசாஆ1** ஆகும். கடந்த 06.06.2016ம் தேதி நான் 1ம் பிரதிவாதி பெயருக்கு பொறுப்பிற்காக எழுதி பதிவு செய்து கொடுத்த கிரய பத்திர ஆவண எண் 1339/2016 சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **வசாஆ2** ஆகும். கடந்த 04.02.2019ம் தேதி சிவக்குமார், துளசிமணி மற்றும் சின்னப்பொன்னு ஆகிய பெயரில் உள்ள 10(1) சிட்டா நகல் பட்டா எண்.366 **வசாஆ3** ஆகும். கடந்த 04.02.2019ம் தேதி பெறப்பட்ட தாவா சொத்திற்கான அடங்கல் **வசாஆ4** ஆகும். 07.02.2019ம் தேதி எனது பெயரில் நான் கட்டிய ரசீது தாக்கல் செய்கிறேன் அது **வசாஆ5** ஆகும். 22.01.2019ம் தேதியில் நான் 1ம் பிரதிவாதி மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திருவண்ணாமலை அவர்களுக்கு புகார் அனுப்பினேன் அந்த புகார் நகல் தாக்கல் செய்கிறேன். பின்னர் 22.01.2019ம் தேதியில் 1ம் பிரதிவாதி மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாரள் அவர்களுக்கு புகார் அனுப்பினேன் அந்த புகார் நகல் தாக்கல் செய்கிறேன். வழக்கு சொத்தின் வழிகாட்டி மதிப்பீட்டின் கணினி நகல் **வசாஆ6** ஆகும். 20.03.2019ம் தேதியன்று நான் எனது வழக்கறிஞர் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சலக ரசீது தாக்கல்

செய்கிறேன் அது **வசாஆ7** ஆகும். மேற்படி 22.01.2019ம் தேதியில் 1ம் பிரதிவாதி மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பார் அவர்களுக்கு புகார் அனுப்பினேன் அந்த புகாருக்கான சிவப்பு நிற ஒப்புதல் ரசீது அது **வசாஆ8** ஆகும். பின்னர் 22.01.2019ம் தேதியில் 1ம் பிரதிவாதி மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புகார் அனுப்பினேன் அந்த அஞ்சலக ஒப்புதல் அட்டை **வசாஆ9** ஆகும். மேற்படி 22.01.2019ம் தேதி அன்று கொடுத்த புகாரின் அடிப்படையில் மாவட் கண்காணிப்பாளர் நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவு அலுவலகததில் இருந்து 18.02.2019ம் தேதியன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கொடுக்கப்பட்ட போலிஸ் சம்மன் அசல் மற்றும் அஞ்சலக உரையின் அசல் தொகுப்பு **வசாஆ10** ஆகும். 08.03.2019ம் தேதியன்று மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அலுவலகத்தில் இருந்து வாதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அசல் மற்றும் அஞ்சலக உரையின் அசல் தொகுப்பு **வசாஆ11** ஆகும். கடந்த 25.03.2019ம் தேதியன்று ஆனானந்தல் கிராம கூட்டு பட்டா எண் 366 சிட்டா மற்றும் அ பதிவேட்டின் கணினி நகல் (2) முறையே **வசாஆ12** ஆகும். 28.05.2019ம் தேதியன்று எனது வழக்கறிஞர் 1ம் பிரதிவாதியின் பெயரை எந்தவொரு வருவாய் துறை ஆவணங்களிலும் சேர்க்கககூடாது என்றும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு மதுராம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் 2ம் பிரதிவாதிய வட்டாச்சியர் கீழ்பென்னாத்தூர் அவருக்கு அனுப்பிய வழக்கிறஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் எண்ணிக்கை (2) **வசாஆ13** ஆகும். மேற்படி 09.09.2019ம் தேதியன்று மாவட்ட ஆட்சி தலைவர் திருவண்ணாமலை அலுவலகத்தில் இருந்து எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அசல் **வசாஆ14** ஆகும். 15.10.2019ம் தேதியன்று திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அசல் மற்றும் அஞ்சலக உறையின் அசல் **வசாஆ15** ஆகும். கடந்த 23.11.2019ம் தேதியன்று நான் 1ம் பிரதிவாதிக்கு நடவடிக்கை எடுக்க கோரி முதலமைச்சர் தனிப்பிரிவு சென்னைக்கு பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பிய புகார் மனுவின் நகல் மற்றும் அதன் அஞ்சலக ரசீது அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அதன் தொகுப்பு **வசாஆ16** ஆகும். 23.11.2019ம் தேதி நான் 1ம் பிரதிவாதியின மேல் நடவடிக்கை எடுக்கக்கோரி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சி தலைவருக்கு பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பிய புகார் மனுவின் நகல் மற்றும் அஞ்சல ரசீது மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல் **வசாஆ17** ஆகும். 23.11.2019ம் தேதி நான் 1ம் பிரதிவாதியின மேல் நடவடிக்கை எடுக்கக்கோரி திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பிய புகார் மனுவின் நகல் மற்றும் அஞ்சல ரசீது மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல் **வசாஆ18** ஆகும். கடந்த 31.12.2019ம் தேதியிட்ட ஆனானந்தல் கிராம கூட்டு பட்டா எண் 366ல் 1ம் பிரதிவாதி இளையபெருமாள் பெயர் சேர்க்கப்பட்டதற்கான சிட்டா வின் கணினி நகல் தாக்கல் செய்கிறேன் அது **வசாஆ19** ஆகும்.

கடந்த 19.06.2024ம் தேதியிட்ட ஆனானந்தல் கிராம கூட்டு பட்டா எண் 366ற்கான 1ம் பிரதிவாதி இளையபெருமாள் பெயர் சேர்க்கப்பட்டதற்கான சிட்டா மற்றும் அ பதிவேட்டின் கணினி நகல் எண்ணிக்கை(2) தாக்கல் செய்கிறேன் அது **வசாஆ20** ஆகும். தாவாபடி தீர்ப்பு ஆக வேண்டுகிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/- M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்